

செயல் திறன் அறிக்கை – 2022

இலங்கை புகையிரத திணைக்களம்

பக்கம்

01. அத்தியாயம் 01

1.1 அறிமுகம் 01

1.2 தாபனத்தின் கூற்று , இலட்சியம், நோக்கு 02

1.3 பிரதான விடயங்கள் 03

1.4 அமைப்பு அட்டவணை 04

1.5 இலங்கை புகையிரத திணைக்களத்தின் பிரதான உப திணைக்கள பிரிவுகள், அலகுகள், வலையமைப்பு 06

1.6 இலங்கை புகையிரத திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனம்/ நிதியம் 08

1.7 வெளிநாட்டு உதவி கிடைக்கும் கருத்திட்டங்களின் தகவல்கள் 08

02 அத்தியாயம் - முன்னேற்றமும் முன் நோக்கும் 09

விஷேட வெற்றி, சவால்களும் முன் நோக்கும்.

03. அத்தியாயம - வருடத்தின் மொத்த நிதி முன்றேற்றங்கள் 19

3.1 நிதி செயல் திறன் கூற்று 19

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று 21

3.3 நிதி வழிமுறை சம்பந்தமான வெளிப்பாடு. 23

3.4 நிதி வெளிப்பாட்டு குறிப்பு 25

3.5 வருமானம் சேகரிப்பு ஆற்றுகை 25

3.6 ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு பயன்படுத்தல் செயல் திறன் 25

3.7 நி. பி 208ன் படி, வேறு அமைச்சு/திணைக்கள பிரதிநிதிகளாக இத் திணைக்களத் திற்கு /மாவட்ட செயலகத்திற்குணுமாகான சபைக் / ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு 25

3.8 நிதி அல்லாத சொத்துக்கள் பற்றி அறிக்கையிடும் ஆற்றுகை 26

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 26

04. அத்தியாயம் - செயல் திறன் காட்டி 27

4.1 நிறுவனத்தின் செயல் திறன் காட்டி 27

(செயற்பாட்டு திட்டத்தை அடிப்படையாக கொண்டு)

05. அத்தியாயம் - நிலையான அபிவிருத்தி நோக்கத்தை (ஸ்புனு) அடைந்து கொள்ளும் செயல் திறன் 28

5.1 கண்டறியப்பட்ட நிலையான அபிவிருத்தி நோக்கு 28

5.2 நிலையான அபிவிருத்தி இலக்கை வெற்றியடைதலும்.'.சவால்களும். 29

6. அத்தியாயம் - மனித வள பகுதி 30

6.1 சேவையாளர் ஊழிய முகாமைத்துவம். 30

6.2 நிறுவனத்தின் செயற்திறனானது மனித வள பற்றாக்குறையில் அல்லது மேலதிகத் தில் செல்வாக்கு செலுத்தும் விதம் 30

6.3 மனித வள அபிவிருத்தி 31

7. பிரிவு அனுகூல அறிக்கை 33

01 அத்தியாயம்

1.1 அறிமுகம்

இலங்கை போக்குவரத்து அமைப்பின் முன்னோடியான இலட்சியத்தை மேற் கொள்ளும் இலங்கை புகையிரத திணைக்களம் 1864 டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி தனது முதலாவது வெள்ளோட்டத்தை ஆரம்பித்ததுடன் தனது இலட்சியப் போக்கை 158 வருட காலமாக வழங்கி வருகின்றது.

பிரதான போக்குவரத்து வழங்குனராக இலங்கை புகையிரத சேவை 2022ம் வருடத்தில் பொருளாதார அபிவிருத்திற்காக பங்களிப்பை வழங்கிக் கொண்டு தனது சேவை நடவடிக்கைகளை தொடர்ச்சியாக கொண்டு செல்கின்றது. 2022ம் வருடத்தில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் தொடர்ச்சியாக செயற்பட்டு சூழல் பற்றுள்ளதும் சிக்கனமானதுமான போக்குவரத்து வழி முறையாக தமது சேவை நடவடிக்கைகளை வினைத் திறனுடன் மேற் கொள்கின்றது.

இலங்கை புகையிரத திணைக்களம் அரசாங்கத்தின் பிரதான திணைக்களமாக போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் இயங்குகின்றது. இத் திணைக்களம் புகையிரத கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படுவதுடன் புகையிரத பொது முகாமையாளர் புகையிரத திணைக்களத்தின் பிரதானியாக செயற்படுகின்றார். இலங்கை புகையிரத திணைக்களத்தில் கிளை மற்றும் அலகுகள் 14ன் கீழ் நிருவாக நடவடிக்கைகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதுடன், உப திணைக்களத்தின் கிளை, அலகு பிரதானிகளுக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களின் கீழ் நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றது.

நாட்டின் 25 மாவட்டங்களில் 21 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் பாதை கி.மீ 1478.52 அளவுள்ள தூரத்தை புகையிரத நிலையங்கள் 418 உடன் பயணிகளுக்கு தேவையான போக்குவரத்து வசதிகளை வழங்குகின்றது. தனது முக்கிய குறிக்கோளான பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்கு பாதுகாப்பானதும், விசுவாசமுடையதுமான குறித்த நேரத்திற்கு பயணிக்கும் சிக்கனமானதும் , வினை திறன் மிக்கதுமான புகையிரத போக்குவரத்து சேவையை வழங்குதலும் சூழல் பற்றுள்ளதும் சிக்கனமானதுமான வினைத் திறன் மிக்க சேவையை வழங்குவதற்கு தனது பாரிய அர்ப்பணிப்புடன் செயல் படுகின்றது. 2021ம் வருடத்திலும் பல்வேறு தடைகளுக்கும் சவால்களுக்கும் மத்தியிலும் தனது சேவையை தொடர்ச்சியாக கொண்டு செல்ல முடிந்துள்ளது.

இவ்வாறான பல்வேறுபட்ட தடைகளின் கீழும் பயணிகளுக்காக வேண்டி வினைத் திறன் மிக்கதும் வசதியுடையதுமான புகையிரத சேவையை வழங்குவதற்காக பல்வேறுபட்ட செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டது. அதன் கீழ் சீனா மற்றும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன புகையிரதங்கள தூரப் பயண சேவைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டதுடன் புதிய புகையிரதங்களை அறிமுகப்படுத்தல் மூலம் பொதுப் பயணிகளின் போக்குவரத்து தேவையை வழங்குவதற்கு இலங்கை புகையிரத திணைக்களம் திடமாக செயற்பட்டு செயலாற்றியது.

நோக்கு

இலங்கையில் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தில் மிகவும் விசுவாசமுள்ள போக்குவரத்து வழங்குனராக திகழ்தல்.

இலட்சியம்

பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்காக பாதுகாப்பானதும், விசுவாசமுள்ளதும் வினைத்திறன் மிக்கதுமான புகையிரத சேவையை வழங்குதல்.


நோக்கம்

- புகையிரத பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து பிரிவுகளின் பங்களிப்பை மேம்படுத்தல்.
- புகையிரத இயக்க செயற்பாடுகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்.
- பயணிகள் புகையிரத சேவையின் வசதிகளை மேம்படுத்தல்.
- புகையிரத சேவையாளர்களினதும் வளங்கள் பிரயோகத்தினதும் திறனை மேம்படுத்தல்.
- புகையிரத வருமானத்தை அதிகரித்துக் கொள்ளல்
- மனித வளத்தை அபிவிருத்தி செய்தல்.
- புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்.

1.3 பிரதான விடயங்கள்

- பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகளை செயற்படுத்தல்
- பொருட்கள் போக்குவரத்தை மேற் கொள்ளல்.
- விஷேட பயணிகள் புகையிரத சேவையை நடைமுறைப்படுத்தல்.

1.4தினைக்கள அமைப்பு



Level 1 **G. M. R** –General Manager railway

Level 2 **AGM(A)** – Addl. General Manager(Admin), **AGM(M)** - Addl. General Manager(Mechanical), **A. G. M. (M)** - Addl. General Manager(Infrastructure), **A**. **G. M. (O**)- Addl. General Manager(Operation), **C. F. O** – Chief Finance officer

Level 3 **DGM**-Deputy General Manager (Admin), **DGM(T**) - Deputy General Manager (Training & HR), **CEM** – Chief Engineer (Motive Power), **CME**- Chief Mechanical Engineer, **CE(W)** Chief Engineer (Way & works), **CSTE-** Chief Engineer (Signal & Telecommunication), , **DGM(C**) - Deputy General Manager (Commercial), **DGMT**- Deputy General Manager (Transport), **CIA**- Chief Internal Auditor, **CA**- Chief Accountant, SRP- Superintendent(RP), **DGMP** - Deputy General Manager (Procurement), **D P** – Director (Planning)

Level 4 **D(A)**-Director (Admin), **DCET** - Deputy Chief Engineer (Training & HRB), **DEMO** - Deputy Chief Engineer (Motive Power), **DEM**- Deputy Chief Engineer (Mechanical), **DEME** - Deputy Chief Engineer (Electrical), **DEW** - Deputy Chief Engineer (Way & Works), **DEBR** - Deputy Chief Engineer (Way & Bridges), **DEBU** - Deputy Chief Engineer (Property Development &Building), **DES** - Deputy Chief Engineer (Signal & Telecommunication), **SC** – Superintendent Commercial, **ST** – Superintendent Transportation

Level 5 **SEM** – SuperintendentEngineer(Motive Power), **SEME**- SuperintendentEngineer(Mechanical), **SEW** - SuperintendentEngineer(Way & works), **SS** – Surveyor Superintendent, **SES** - SuperintendentEngineer(Signal & Telecommunication), **SEP** -SuperintendentEngineer (Planning Project), **DSSM** – DeputySuperintendent (Sales & Marketing), **DIT** - DeputyDirector (Information Technology), **DSRP** - DeputySuperintendent (R. P), **SP** – Superintendent (Procurement)

Level 6 **ADA** – Assistant Director (Admin) / Deputy Director (Admin), **LGO** – Legal Officer, **ET** – Engineer (Training & HRB), **EM** – Engineer (Motive Power), **ATM** – Asst. Transportation Superintendent (Mechanical), **ATE** - Asst. Transportation Superintendent (Energy Conservation), **EM** – Engineer (Mechanical), **EE**– Engineer (Electrical), **CM** – Chemist & Methodologist, **EW** – Engineer (Way & Works), **S** – Surveyor, **ES** – Engineer (Signaling & Telecommunication), **EP** – Engineer (Planning & Project), **AC** – Asst. Director / Deputy Director (Cost), **AST**– Asst. Superintendent (Transportation / Commercial), **AC** – Accountant, **ADI** – Asst. Director (Information Technology), **ASRP**-Asst. Superintendent (R. P), **ASP**– Asst. Superintendent (Procurement), **ADP** – Asst. Director (Planning)

1.5 இலங்கை புகையிரத திணைக்களத்தின் உப திணைக்களங்கள், பிரிவுகள் , மற்றும் அலகுகள் அமையப் பெற்றுள்ள விதம்.

அட்டவணை இல 01 - உப திணைக்களங்கள், பிரிவுகள் ,அலகுகள்

#	உப திணைக்களம்/ அலகு	திணைக்களம்/உப திணைக்களம்/ அலகுகளின் பிரதானிகள்
01	புகையிரத பொது முகாமையாளர் காரியாலயம்	புகையிரத பொது முகாமையாளர்
02	பிரதான இயந்திர பொறியியலாளர் உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (இயந்திரம்)
03	பிரதான பொறியியலாளர் (பாதை/வேலைத்தளம்) உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (பாதை/வேலைத்தளம்)
04	பிரதான பொறியியலாளர் (இயக்க வலு) உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (இயக்க வலு)
05	பிரதான பொறியியலாளர் (சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு) உப திணைக்களம்	பிரதான பொறியியலாளர் (சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு)
06	பிரதான கணக்காளர் உப திணைக்களம்	பிரதான நிதி உத்தியோகத்தர்
07	வாணிப உப திணைக்களம்	பிரதி முகாமையாளர் (வாணிபம்)
08	புகையிரத களஞ்சிய உப திணைக்களம்	பிரதி முகாமையாளர் (பெறுகை)
09	போக்குவரத்து உப திணைக்களம்	பிரதி முகாமையாளர் (இயக்கம்)
10	இலங்கை புகையிரத பாதுகாப்பு சேவை	பாதுகாப்பு அதிகாரி
11	இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம்	பிரதி முகாமையாளர் (பயிற்சி மற்றும் மணித வளம்)
12	பிரதான ஆகுசெலவு உத்தியோகத்தர் காரியாலயம்	பிரதான ஆகு செலவு உத்தியோகத்தர்
13	திட்டமிடல் பகுதி	பணிப்பாளர் (திட்டமிடல்)
14	தரவுகள் ஒருங்கினைப்பு அலகு	முகாமையாளர் தரவுகள் ஒருங்கினைப்பு

அட்டவணை இல 02 - புகையிரத பாதை கட்டமைப்பு

பாதை	தூரம் கி.மீ	புகையிரத நிலைய எண்ணிக்கை	உப புகையிரத நிலைய எண்ணிக்கை	புகையிரத தரிப்பிடம்
கரையோர பாதை (கொழும்பு கோட்டையிலிருந்து பெலிஅத்த வரை)	186	41	33	0
பிரதான பாதை (கொழும்பு கோட்டை - பதுளை வரை)	292.38	45	33	26
மாத்தளை பாதை (பேராதெனிய - மாத்தளை வரை)	33.75	06	06	12
புத்தளம் பாதை (ராகம - புத்தளம் வரை)	119.57	19	25	0
புத்தளம் அருவக்காடு பாதை	37.00	01		
களனிவெளி பாதை (மருதானை - அவிஸ்ஸாவெல வரை)	59.27	11	19	7
துறைமுக பாதை	7.00	01	-	-
கொலன்னாவ பாதை	3.18	01	-	-
வடக்கு பாதை (பொல்கஹவெல – காங்கேசன்துறை)	339.47	31	26	17
தலை மன்னார் பாதை (மெதவச்சி - தலை மன்னார்)	106.06	07	04	0
மிஹிந்தளை பாதை	13.50	01	0	02
மட்டக்களப்பு பாதை (மாஹோ – மட்டக்களப்பு வரை	211.11	14	17	05
திருகோணமலை பாதை (கல்ஓயா சந்தி– திருகோனமலை வரை)	70.23	04	02	02
மொத்தம்	**1478.52**	**181**	**166**	**74**

2022ம் வருடத்தில் நாகுலுகமுவ எனும் புதிய உப புகையிரத நிலையம் திறந்து வைக்கப்பட்டது.

1.6 திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனம்Zநிதியம்

இலங்கை புகையிரத திணைக்களத்தின் கீழ் வேறு நிறுவனங்களோ நிதியங்களோ இல்லை

1.7 வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப் பெறும் கருத்திட்டங்கள்

அட்டவனை இல 03

#	வகை	கருத்திட்டத்தின் மதிப்பீட்டு செலவு அ.டொ. ரூபா.மி	தற்போதையமுன்னேற்றம்
01	மாஹோவிலிருந்து ஓமந்தை வரையில் புகையிரத பாதை புனரமைப்பு கருத்திட்டம்	91.26	நடைமுறையில் உள்ளது
02	160 பயணிகள் பெட்டி (இந்திய கடண் உதவி)	86.00	கொள்வனவு முடிவுற்றுள்ளது

02ம் அத்தியாயம்

முன்னேற்றமும் முன்நோக்கும் .....

பொதுவான முன்நோக்கு

இலங்கை புகையிரத சேவை (SLR) இலங்கையின் பிரதான போக்குவரத்து வழங்குனராக 2022 ஆம் வருடத்தில் இலங்கையின் பொருளாதாரத்திற்கு உச்சளவிலானதும் தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கியுள்ளதுடன் பல்வேறு சவால்கள் மற்றும் எதிர்பாரா நிலைமைகளுக்கு மத்தியிலும் 2022ம் வருடத்தில் புகையிரத சேவை மூலம் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து சேவைகள் மேற் கொள்ளப்பட்டன.

கடந்த இரு வருட காலத்திற்குள் நாடு முகம் கொடுத்த Covid-19 நிலைமை முடிவடைந்ததையடுத்து 2022ம் வருடத்தில் இலங்கை புகையிரத சேவையை வழமையான சேவைக்கு இட்டுச் செல்ல முடிந்துள்ளது.

2021ம் வருடத்தின் முழு வருமானம் ரூபா மில்லியன் 2,678.72 வாக காணப்பட்டதுடன் அது 2022ம் வருடத்தில் ரூபா மில்லியன் 11,076.10 வரை ரூபா மில்லியன் 8,397.28 வினால் கூடியுள்ளது. முழு வருமானத்துடன் சம்பந்தப்பட்ட சகல வருமான விடயங்களிலும் 2022ம் வருடத்தில் முன்னேற்றத்தை காணக் கூடியதாக இருந்தது. பயணிகள் வருமானம் 2022ம் வருடத்தில் ரூபா மில்லியன் 9,174.91 வாக காணப்பட்டதுடன் அது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது ரூபா மில்லியன் 7,556.50 னால் கூடியுள்ளது. இவ்வாறு வருமானம் கூடுவதற்கான காரணம் பயணம் செய்யும் பயணிகன் தொகை கொரோன காலத்தை விட அதிகரித்தமையும் வருட நடுப்பகுதியில் புகையிரத பிரவேசப்பத்திர கட்டணம் அதிகரிக்கப்பட்டமையும் ஆகும்.

2022ம் வருடத்தில் மீண்டெழும் செலவு கூடிய காரணத்தினால் முழுச் செலவு 5.2% வீதத்தினால் கூடியுள்ளது. அதன் படி முழுச் செலவு 2022ம் வருடத்தில் ரூபா மில்லியன் 42,531.43 காணப்பட்டதுடன் அது 2021ம் வருடத்தில் ரூபா மில்லியன் 40,416.06 வாக காணப்பட்டது. முழுச் செலவினுல் மீண்டுவரும் செலவினமும், மூலதன செலவும் உள்ளடங்குவதுடன் மீண்டுவரும் செலவினம் 2022ம் வருடத்தில் 81.15% வீதத்தினால் 2021ம் வருடத்துடன் ஒப்பிடும் போது கூடியுள்ளதுடன் 2022ம் வருடத்தில் முழு மீண்டுவரும் செலவினம் ரூபா மில்லியன் 23,512.62 ஆகும். 2021ம் வருடத்தில் அது ரூபா மில்லியன் 12,979.21 ஆகும். எரிபொருள் செலவு கூடியமை மீண்டுவரும் செலவினம் கூடியமைக்கு பிரதான காரணமாகும். மீண்டுவரும் செலவினம் 2022ம் வருடத்தில் ரூபா மில்லியன் 19,018.81 வும், மற்றும் 2021ம் வருடத்தில் ரூபா மில்லியன் 27,436.85 ஆகும்.

பயணிகள் பெட்டி 200 புனரமைப்பு செய்யும் கருத்திட்டத்தின் தொடர் செயற்பாடாக மேலும் பெட்டி 100 புனரமைப்பு செய்யும் கருத்திட்டம் 202ம் வருடத்தில் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டது. பாதை கட்டமைப்பின் சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பு மற்றும் புகையிரத தொடரணியின் சகல பராமரிப்புகளும் மேம்படுத்தலும் மட்டுப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டுக்குள் தொடராக மேற் கொள்ளப்பட்டது.

இந்திய கடன் உதவியின் கீழ் பயணிகள் பெட்டி 160 கொள்வனவு செய்யும் கருத்திட்டத்தின் மூலம் கொள்வனவு நடவடிக்கை 2022ம்வருடத்திற்குள் நிறைவு செய்யப்பட்டது. மேலும் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கைகளின் பயனாற்றலை மேலும் மேம் படுத்துவதற்காக மாஹோவிலிருந்து ஓமந்தை வரை புகையிரத பாதை புனரமைப்பு நடவடிக்கையை செயற்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் புகையிரத அபிவிருத்திக்காக 2022ம் வருடத்திற்குள் செயற்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டமாகும். மூலதன செலவுகள் கட்டுப்படுத்தப்பட்டமை மூலதன செலவுகள் குறைந்தமைக்கக காரணமாக அமைந்தது.

மேலும் கரையோர புகையிரத பாதையில் பயாகல தெற்கிலிருந்து அலுத்கமை வரையில் புகையிரத இரட்டை பாதையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பித்தல் மற்றும் புத்தளம் புகையிரத பாதையில் நீர் கொழும்பு மற்றும் குரனைக்கிடையிலான புகையிரத இரட்டை பாதையின் செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

இலங்கை புகையிரத திணைக்களத்தில் நிலவும் சவால்களை வெற்றி கொண்டு நிலையான அபிவிருத்தி கோட்பாட்டின் படி செயற்படுவதற்காக வேண்டி சகல முயற்சிகளும் மேற் கொள்ளப்படுகின்றன. இவ் இலக்கை அடைவதற்காக உச்சளவு முயற்சியுடன் சரியா நோக்கின் கீழ் புகையிரத திணைக்களம் செயற்பாடுகளை மேற் கொள்கின்றது. விஷேடமாக இந்திய கடன் உதவியின் கீழ் மற்றும் சீன கடன் உதவியின் கீழ் இந் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட அதி சொகுசு புகையிரதங்கள் பயணிகளின் தேவைக்காக போக்குவரத்ததில் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. அதே போன்று உல்லாச பயணிகளை கருத்திற் கொண்டு விஷேட புகையிரதங்களை சேவையில் ஈடுபடுத்தல் உல்லாசப் பயணத்துறைக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும். மேலும் பயணிகள் அற்ற வருமான வழிகள் முன்னேற்றத்திற்காக விஷேட நிகழ்ச்சி நிரல் பல திட்டமிடப்பட்டுள்ளன.

2022ம் வருடத்தில் புகையிரத பயணிகள் மில்லியன் 102.73 பயணித்துள்ளதுடன் பயணிகள் கிலோ மீற்றர் மில்லியன் 6,602.24 வான தூரம் போக்குவரத்து செய்யப்பட்டுள்ளது. அதே போன்று பொருட்கள் டொன் மில்லியன் 1.75 வான அளவு ஏற்றியிறக்கப்பட்டு பொருட்கள் டொன் 138.68 வான தூரம் போக்குவரத்து செய்து இலங்கை புகையிரத சேவை தனது தொடர்ச்சியான பங்களிப்பை பொருளாதாரத்திற்கு வழங்கியுள்ளது.

நிதி முன்னேற்றம்

2022 ஆம் வருடத்தில் இலங்கை புகையிரத திணைக்களம் சம்பாதித்த வருமானமும், செலவும் சம்பந்தமான தகவல்கள் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021 வருடத்தில் வருமானம் வகைப்படுத்தல்

அட்டவனை இல 04

#	வருமான வகை	வருமானம் (ரூபா. மில்) 2021	வருமானம் (ரூபா. மில்) 2022
01	பயணிகள்	1,606.84	9,174.91
02	பொதி மற்றும் தபால்	59.00	296.98
03	பொருட்கள் மற்றும் கால்நடை	431.45	915.66
04	வேறு	581.45	688.53
மொத்தம்		**2,678.72**	**11,076.10**

அட்டவனை இல 05

செலவு பிரிவு

செலவு வகை	செலவு (ரூபா.மி)
மீண்டுவரும் செலவினம்	23,512.62
மூலதனச் செலவு	19,081.81
மொத்தம்	42,531.43

புகையிரத பிரவேசப்பத்திர கட்டணம் அதிகரிக்கப்பட்டமையும் கொவிட் நிலைமையின் பின்பு புகையிரதத்தில் பயணிக்கும் பயணிகளின் தொகை அதிகரித்ததன் காரணத்தினால் புகையிரத வருமாணம் போற்றத்தக்களவு வருமானத்தை 2022ம் வருடத்திற்குள் காட்டியது. 2022ம் வருடத்தின் முழு வருமானம் ரூபா மில்லியன் 11,076.10 வாக காணப்பட்டதுடன் அது 2021 ம் வருடத்தில் ரூபா மில்லியன் 2,678.72 ஆகும். அதன் படி முழு வருமானத்தில் 313% வீதமாக அதிகரித்து காணப்படுகின்றது

2022ம் வருடத்தில் முழுச் செலவு ரூபா மில்லியன் 42,531.43 ஆவதுடன், இதனுள் ரூபா மில்லியன் 23,512.62 வான மீண்டுவரும் செலவினமும் ரூபா மில்லியன் 19,018.81 வான மூலதன செலவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

வாணிப நடவடிக்கைகள்

குறித்த காலவெல்லைக்குள் புகையிரத வருமானத்தை உயர்த்திக் கொளவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வாணிப நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.

1. இந்திய அரசின் கடன் உதவியின் கீழ் கிடைத்த உணவுப் பொருட்கள் பல பிரதேசங்கள் ஊடாக பயணித் கொண்டு செல்லல்.
2. புகையிரத நிலைய களஞ்சியசாலை, புகையிரத நிலைய நிலையான சிற்றுண்டிச்சாலை, புகையிரத நிலைய வளாகத்தில் அமைந்துள்ள சிறிய கடைகளை கேள்விமனு மூலம் குத்தகைக்கு வழங்குதல்.
3. புகையிரதத்தின் மூலம் விவசாய உற்பத்திப் பொருட்ககளை கொண்டு செல்ல திட்டம் தயாரித்தல்.
4. வனவாசலவிலிருந்து அருக்வத்தை வரை புகையிரதத்தின் மூலம் குப்பைகளை கொண்டு செல்வதற்கான பரிசோதனை புகையிரத போக்குவரத்தை மேற் கொள்ளல் மற்றும் அதற்குரிய முன் நடவடிக்கைகளை திட்டமிடல்
5. மரக்கறி வகைகளை கொண்டு செல்வதற்கான ஆரம்ப செயற்பாடுகளை தொடக்கி வைத்தல்.

உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி

2022ம் வருடத்தில் புகையிரத பாதை,கட்டிடம், பாலம் சமிக்கை கட்டமைப்பு போன்ற பிரிவுகளில் கீழ்க் குறிப்பிடப்படும் பிரதான அபிவிருத்தி பராமரிப்பு அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டன.

- புகையிரத பாதைகளின் பராமரிப்பு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற் கொள்ளல்.
- கண்டி,பேராதெனிய மற்றும் கடுகன்னாவ புகையிரத பாதைகளும் அதனோடு சம்பந்தான செயற்பாடுகளையும் தொடர்ச்சியாக மேற் கொள்ளல்.
- புத்தளம் புகையிரத பாதையில் புகையிரத இரட்டை பாதை நிர்மாணித்தலை கட்டுநாக்க வரை பூரணப்படுத்தல்.
- புதிய புகையிரத நிலைய கட்டிடங்களை நிர்மாணித்தல், பாலம் பராமரிப்பு, மற்றும் புகையிரத நிலையங்களின் மலசலகூட வசதிகளை மேம்படுத்தலை தொடர்ச்சியாக மேற் கொள்ளல்.
- சமிக்கை தொலைத் தொடர்பு கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் பராமரிப்பு செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேற் கொள்ளல்.
- பொல்கஹவெலயிலிருந்து குருநாகல் வரை புகையிரத இரட்டை பாதையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் ஆரம்பகட்ட வேலைகளை தொடர்ச்சியாக மேற் கொள்ளல்.
- பயாகல தெற்கு– அலுத்கமை வரையில் புகையிரத இரட்டை பாதையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தின் ஆரம்பகட்ட வேலைகளை தொடர்ச்சியாக மேற் கொள்ளல்.
- மாஹோவிலிருந்து ஓமந்தை வரை புகைபயிரத பாதை புனரமைப்பு செய்யும் கருத்திடடத்தின் ஆரம்பகட்ட வேலைகளை தொடர்ச்சியாக மேற் கொள்ளல்.

புகையிரத தொடரணி

வினைத்திறன் மிக்க பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்தினை வழங்குவதற்காக இலங்கை புகையிரத சேவையின் புகையிரத தொடரணியை தொடராக பராமரித்தல் மற்றும் பழுது பார்ப்புகள் இக் காலவெல்லைக்குள் மேற் கொள்ளப்பட்டன.

பிரதான பழுதுபார்ப்புக்கள் 549 அளவிலும், சிறி பழுதுபார்ப்புகள் 10,287 உம் இக்காலவெல்லைக்குள் மேற் கொள்ளப்பட்டன. பயணிகள் பெட்டி புனரமைப்பு, பவரசெட், என்ஞின், கெல் 4 மற்றும் ரயில் பஸ் பழுதுபார்ப்பு, என்ஜின் புனரமைப்பு மற்றும் ரீ என்ஜின் பொருத்தல், இயந்திர உபகரணங்கள் பழுதுபார்ப்பு பராமரிப்பு போன்றவை இக்கால எல்லைக்குள் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டன. 160 பயணிகள் பெட்டிகள் 2022ம் வருடத்திற்குள் இறக்குமதி செய்யப்பட்டது இதற்கு மேலதிகமாக 200 பயணிகள் பெட்டிகள் புனரமைப்பு செய்யும் நடவடிக்கைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன் குளிரூட்டப்பட்ட 02 டீசல் வலுவேக தொகுதிகளும் 160 பயணிகள் பெட்டிகளும், கொள்வனவு செய்வதற்காக ஆரம்ப கொடுப்பனவு மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் தற்போது பயணிகள் பெட்டி 160ல் 80 இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

பயணிகள் பெட்டி 200 புனரமைப்பு செய்யும் கருத்திட்டத்தின் தொடராக மேலும் பயணிகள் பெட்டி 100 யின் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதில் 50 பெட்டிகளின் வேலைகள் முடிவுற்று டியக்கத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து

2022ம் வருடத்தில் பயணிகள் மில்லியன் 102.73 புகையிரதத்தில் பயணித்துள்ளதுடன் 2021ம் வருடத்துடன் ஒப்பிடும் போது அது 185% வீதத்தினால் அதிகரித்தமையை காட்டுகின்றது. இவ்வாறு பயணிகள் தொகை அதிகரித்தமைக்கு பிரதான காரணம் கொவிட் நிலைமை குறைந்தமையினால் புகையிரதத்தில் பயணிக்கும் பயணிகள் தொகை அதிகரித்தமையே ஆகும்.
பயணித்த பயணிகள் தொகையும் பயணிகள் வருமானமும்அட்டவணை இல.06

வருடம்	பயணித்த பயணிகள் தொகை (மி)	பயணிகள் வருமானம் ரூபா.மி	பயணிகள் கி.மீ (மி)
2021	35.96	1,606.83	2,158.16
2022	102.73	9,174.91	6,602.24

இவ்வருடத்திற்குள் 06 புதிய புகையிரத போக்குவரத்து தடவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

1. காங்கேசன்துறையிலிருந்து வவுனியா வரை - யாழ் ராணி புகையிரதம் (நாளொன்றுன்னு 02 முறைகள்)
2. பதுளையிலிருந்து கொழும்பு கோட்டை வரை - எல்ல ஒடிசி (தேர்ந்தெடுக்கப்பட்ட நாட்களில் மாத்திரம் இரு தடவை)
3. நீர் கொழும்பிலிருந்து கோட்டை வரை (நாளொன்றுக்கு இரு தடவை)

பொருட்கள் வருமானமும் கொண்டு செல்லப்பட்ட பொருட்களின் அளவும்
அட்டவணை இல 07

வருடம்	பொருட்கள் வருமானம் ரூ.(மி)	பொருட்கள் அளவு டொன். (மி)	டொன் கி.மீ அளவு (மி)
2021	431.45	1.83	161.56
2022	915.66	1.75	138.68

- 2022ம் வருடத்தில் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கை சம்பந்தமாக கருதும் போது பொருட்கள் போக்குவரத்து வருமானம் 112% வீதமும் பொருட்கள் டொன் அளவு 4.3% மும், டொன் கி.மீ அளவு 14% அளவும் குறைந்துள்ளது.

இயக்க காட்டிஅட்டவணை இல 08

இல	செயல் திறன் காட்டி	2021	2022
01	பயணித்த பயணிகள் தொகை (மில்லியன்)	35.96	102.73
02	பயணிகள் கி.மீ அளவு (மில்லியன்)	2,158.16	6,602.24
03	ஏற்றியிறக்கப்பட்ட பொருட்கள் டொன்(மில்லியன்)	1.83	1.75
04	பொருட்கள் டொன் கி.மீ (மில்'லியன்)	161.56	138.68
05	புகையிரத கிலோ மீற்றர் அளவு	5,573,714.61	10,096,309.62

2.8 முழு புகையிரத போக்குவரத்து

அட்டவனை09

புகையிரத சேவை	திட்டமிடப்பட்ட புகையிரத எண்ணிக்கை	போக்குவரத்தில் ஈடுபட்ட புகையிரத எண்ணிக்கை
புற நகர்	25,880	24,084
பிரதேச	67,307	63,002
தூர மற்றும் நகர் சேவை	18,880	18,188
ரேல் பஸ்	416	333
i பயணிகள்	**112,483**	**105,607**
ii பொருட்கள்	**8,510**	**5,309**
மொத்தம்	**233,476**	**216,523**

மேற் கூறப்பட்ட அட்டவணை இல 09ல் குறிப்பிடப்பட்ட தகவல்களின் படி 2022ம் வருடத்திற்குள் போக்குவரத்திற்காக திட்டமிடப்பட்ட பயணிகள் புகையிரத தொகை **112,483**ஆவதுடன் அதில் **105,607** புகையிரதம் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்பட்டது. அதை விகிதாசாரமாக கருதுமிடத்து 93% வீதமாகும். நாட்டில் நிலவிய கொவிட்-19 நிலைமை முடிவடைந்ததுடன் மீண்டும் அப்பயணத்திற்காக புகையிரத த்தை பயன்படுத்தல் இவ்வாறு அதிக புகையிரத தடவைகள் மேற் கொள்வதற்கு கரணமானது.

நிரந்தர பாதை கட்டமைப்பும் கட்டிடமும்

நிரந்தர பாதைகள் கட்டமைப்பின் பராமரிப்பு நடவடிக்கை மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்ச்சியாக மேற் கொள்ளப்பட்டதுடன் அதற்காக தண்டவாளம் மீற்றர் 180607 வும், கொங்கிரீட் சில்பர் 58597 உம், மரக்குற்றி சில்பர் 50923உம், ப்ளஸ்ட் கியூப் 19223 உம், பயன்படுத்தப்பட்டன.

புகையிரத பாதை பராமரிப்புக்காக பயன்படுத்தப்பட்ட பொருட்கள்

அட்டவனை இல10

பயன்படுத்தப்பட்ட பொருட்கள	அளவு
தண்டவாளம் (மீற்றர்)	112,523
மர குற்றி சில்பர்	42,080
உருக்கு சில்பர்	1,579
கொங்கிரீட் சில்பர்	33,517
ப்ளஸ்ட் கியூப்	12,316

சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்பு

சமிக்கை கட்டமைப்பின் தொடரான பராமரிப்பு மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கை போன்றவை வினைத்தின் மிக்க புகையிரத சேவையை மேற் கொள்வதற்கு முக்கியமான சாதகமாகும் 2022ம் வருடத்திலும் சமிக்கை கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் பழுதுபார்த்தல்களை தொடராக மேற் கொண்டு கீழ் குறிப்பிடப்படும் விடயங்கள் செயற்படுத்தப்பட்டது.

1. வெல்லவ புகையிரத நிலையத்தின் இயந்திர சமிக்கை கட்டமைப்பை தன்னியக்க வர்ண ஒளி சமிக்கை கட்டமைப்பாக மாற்றம் செய்தல்.
2. குருநாகல் மற்றும் வெல்லவ புகையிரத நிலையங்களுக்கிடையில் தன்னியக்க ப்ளோக் சமிக்கை கட்டமைப்பை நிறுவுதல்.
3. பாதுக்கை வக புகையிரத நிலையங்களுக்கிடையில் தன்னியக்க ப்ளோக் சமிக்கை கட்டமைப்பை நிறுவுதல்.
4. பாதுகாப்பற்ற புகையிரத கடவை பாதைகளுக்காக பாதுகாப்பான 13 கடவை பாதை கட்டமைப்பை நிறுவுதல்.

சவால்களும் குளறுபாடுகளும்

1. பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்திற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளில் நிலவும் குறைபாடுகள்.
2. சகல புகையிரத பாதைகளிலும் காணப்படும் பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளின் தொகை அதிகரித்து காணப்படல்.
3. பிரவேசப்பத்திமின்றி பயணித்தலை கட்டுப்படுத்தலிலுள்ள சிக்கல்கள்.
4. என்ஜின்களின் கையிருப்பின்மை.
5. தொழில்நுட்ப பிரிவுகளில் நிலவிய அதிக வெற்றிடம்.
6. மீண்டுவரும் செலவினம் விஷேடமாக மேலதிக உதிரிப் பாகங்களின் விலை குறுகிய காலத்திற்குள் மூன்று மடங்காக உயர்வடைதல்.

நாளாந்த சேவையை மேற் கொள்ளும் போது சகல பிரிவுகளிலும் நிலவும் சேவையாளர்களின் பற்றாக்குறை காரணமாக குறித்த விடயங்களின் போது குளறுபாடான விடயங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

புகையிரத சேவையின் தரத்தையும் விசுவாச தன்மையையும் மேம்படுத்துவதற்காக 2021ம் வருடத்தில் மேற் கொள்ளப்பட்டதும் எதிர் காலத்தில் மேற் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ள விடயங்களும்.

- இந்தியா மற்றுளும் சீனாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய புகையிரதங்கள் பயணிகளின் பயன்பாட்டுக்காகவும் . பொருட்கள் போக்குவரத்திற்காகவும் ஈடுபடுத்தல்.
- உள் நாட்டிலேயே பயணிகள் பெட்டிகளை தயாரித்தல்.
- குளிரூட்டப்பட்ட பவர்செட் தொகுதி 02 கொள்வனவு செய்தல்
- மாஹோவிலிருந்து ஓமந்தை வரை புகையிரத பாதையை புனரமைப்பு செய்தல் நடவடிக்கைகளை தொடராக மேற் கொள்ளல்.
- களனிவெளி புகையிரத பாதையை மேம்படுத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.
- பயணிகள் பெட்டி 200 புனரமைத்தலை பூர்த்தி செய்து அக் கருத்திட்டத்தின் தொடராக புதிய பெட்டி 100 புனரமைப்பு செய்தலை ஆரம்பித்தல்.
- உலக வங்கியினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 14 புகையிரத நிலையங்களில் மலசல கூட வசதிகளை மேம்படுத்தல்.
- அக் கருத்திட்டத்தின் கீழ் 80 பயணிகள் பெட்டிகளில் மலசலகூட வசதிகளை மேம்படுத்தல்.
- ஆசிய அபிபவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் மேற் கொள்ளப்படும் கொழும்பு புர நகர் புகையிரத கருத்திட்டம்.

கொழும்புபுர நகர் புகையிரத சேவையை மிகவும் வினைத்தறன் மிக்கதாகவும் பயணிகளை கவரக் கூடியதும் பயணிகள் அவதானத்தை ஏற்படுத்தும் வகையில் பிரதான, களனிவெளி, கரையோர மற்றும் புத்தளம் போன்ற புகையிரத பாதைகளை உள்ளடக்கும் வகையில் புகையிரத உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல். இக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். புரநகர் பிரதேசங்களின் புகையிரத பாதை கட்டமைப்பையும் சமிக்கை மற்றும் தொலைத் தொடர்பு கட்டமைப்புகளையும் புகையிரத நிலைய அபிவிருத்தி செய்தல் போன்ற கருத்திட்டங்கள் பல இக் கருத்திட்டங்களின் கீழ் மேற் கொள்ளப்படுகின்றது.

கீழ்க் குறிப்பிடப்படும் கருத்திட்டங்களை மேற்கொள்வதற்கான ஆரம்ப திட்டமிடல் செயற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

- பொல்கஹவெலவிலிருந்து குருநாகல் வரையில் புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்.
- குருநாகலிருந்து மாஹோ வரையில் புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்.
- பயாகல தெற்கிலிருந்து அலுத்கமைவரையில் புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்.
- இந்திய கடண் உதவியின் கீழ் இரத்மலானை மற்றும் தெமட்டகொடையில் புகையிரத இயக்கத்தளம் மற்றும் புகையிரத யாட்களை அமைத்தல்.
- மாஹோவிலிருந்து அனுராதபுர வரையில் சமிக்கை கட்டமைப்பை நிறுவுதல்.
- புகையிரத என்ஜின் 12 கொள்வனவு செய்தல்.

முன்நோக்கு

நடைமுறை அரசாங்கத்தின் போக்குவரத்து கொள்கையின் பிரதானமான குறிக்கோளாவது பாதை நெரிசலற்ற போக்குவரத்திற்கு பொருத்தமான போக்குவரத்து வழிமுறையை தேரந்தெடுப்பதாகும். ஆதன் படி பாதைகளில் பயணிக்கும் பயணிகள் மற்றும் பொருட்கள் போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக இயலுமான வரை புகையிரதத்தின் மூலம் மேற் கொள்வது பிரதான அபிலாஷையாகும். ஆரசின் கொள்கையின் அடிப்படையில் புகையிரத உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது தேவையை கணடறிந்து அவற்றை செயற்படுத்துவதன் மூலம் பயணிகளுக்காக மிகவும் வினைத்திறன்மிக்க சிக்கனமான புகையிரத சேவையை வழங்குவது புகையிரத திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். ஆதன் படி புகையிரத திணைக்களத்தின் முன் திட்டமிடல்களில் இந் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு மேற் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் கீழ் மிகவும் ஆகர்ஷமானதும் சூழல் பற்றுள்ள போக்குவரத்து வழி முறையாக புகையிரத சேவையில் கீழ்க் குறிப்பிடப்படும் சாதகமான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றத.

- வினைத்திறன் மிக்கதும் சுகபோகமுமான புகையிரத சேவையை மேற் கொள்ளல்.
- புானந்துறை- கொழும்பு- வெயங்கொடை, றாகம- கட்டுநாயக்க- நீர்கொழும்பு மற்றும் மருதானை – ஹோமாகம போன்ற புகையிரத நிலையங்களுக்கிடையில் மின்சார புகையிரத கட்டமைப்பை அறிமுகப்படுத்தலும் பொதுவான புகையிரத சேவைகளுக்கு மேலதிகமாக சுகபோக காரியால புகையிரத சேவையை ஆரம்பித்தல்.
- புகையிரத சேவையை நவீனமயப்படுத்துவதற்காக நவீன தொழில்நுட்ப முறைகளையும் மற்றுட் டிஜிட்டல் மயமாக்கலையும் அறிமுகப்படுத்தி புகையிரத பிரவேசப்பத்திரம் வழங்குதல் மற்றும் ஆசன முன் பதிவுக்காக ஒன்லயின் சேவையையும் ஈ பிரவேசப்பத்திர் மற்றும் தன்னியக்க உட்செல்லல் வெளிசெல்லல் வாயில்களை அறிமுகப்படுத்தல்.
- பொருட்கள் போக்குவரத்தை மேம்படுத்துவதற்காக தேவையான புகையிரத என்ஞின்களை பெற்றுக் கொள்ளல் மற்றும் புகையிரத தட்டுகளை உள் நாட்டிலேயே அமைத்தல் கொழும்பு, ஹம்பந்தோட்ட, திருகோனமலை,காங்கேசன்துறை போன்ற துறைமுகங்களில் புகையிரதத்ங்கள் மூலம் பொருட்கள் ஏற்றியிறக்கலை மேற் கொள்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திக் கொள்ளல்.

எதிர்கால அபிவிருத்தி கருத்திட்டங்கள்

01. பொல்கஹவெலவிலிருந்து குருநாகல் வரை புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்
02. குருநாகலிலிருந்து மாஹோ வரையில் புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்
03. புத்தளம் புகையிரத பாதையில் நீர் கொழும்பிலிருந்து கொச்சிகடை வரையில் புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்.
04. புழைய களனி பாலத்தை மீள அமைத்தல்
05. புகையிரத சேவைக்கான எதிர்கால பிரதான திட்டத்தை வகுத்தல்.
06. இலக்ரோனிக் பிரவேசப்பத்திர முறையை அறிமுகம் செய்தல்
07. புயணிகள் பெட்டிகளை உள் நாட்டிலேயே தயாரித்துக் கொள்ளல்.
08. புதிய புகையிரத சமிக்கை கட்டமைப்பை நிறவுதல்.
09. புன்முகப்படுத்தப்பட்ட மேற்பார்வை செய்யக் மூடிய பாதுகாப்பான புகையிரத கடவை பாதை கட்டமைப்பை நிறுவுதல்
10. புயணிகள் பெட்டி 200 புனரமைப்பு செய்யும் கருத்திட்டத்தின் தொடராக மேலும் 100 பெட்டிகளை புனரமைப்புச் செய்தல்.
11. பயாகல தெற்கு - அலுத்கமை வரையில் புகையிரத இரட்டை பாதையை அமைத்தல்.
12. களுத்தறை- பொல்கஹவெல இடையில் மின்சார புகையிரதத்தை ஆரம்பித்தல்.

03 அத்தியாயம்

2021 திசம்பர் 31ம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான இறுதி நிதி செயல் திறன் வெளிப்பாடு

3.1 நிதி செயல் திறன் கூற்று

வரவு செலவு (நிகழ் வருடம்)		குறிப்பு	உண்மையான		
			நிகழ் வருடம்	கடந்த வருடம்	
-	**கிடைத்த வருமானம்**				
-	வருமான வரி	**1**			
-	உள்ளூர்பொருட்கள் சேவைகள் வரி	**2**			ஏசிஏ-1
-	சர்வதேச வியாபார வரி	**3**			
8,900,000,000	வரி அல்லாத வருமானம் மற்றும் ஏனைய	**4**	10,335,603,441	2,678,724,989	
